

# ஆசிரியர் தகுதித்தேர்வு மாதிரி வினாவிடை

www.kalvisolai.com

## குழந்தை மேம்பாடும் கற்பித்தல் முறைகளும்

61. குழந்தையைக் குழந்தையாக கருத வேண்டும் என்று கூறியவர்?
A. லெக்ஸ்லர், B. காக்னே, C. ரூசோ, D.பினே

62. குழந்தைகளுக்கான 'கற்கும் உரிமை'-யை ஐ.நா சபை நடைமுறைப்படுத்திய நாள்?
A. டிசம்பர் 10, 1949, B.நவம்பர் 20, 1959,
C. நவம்பர் 10, 1969, D. டிசம்பர் 20, 1979

63. ஒரு குழந்தையின் முதல் ஆசிரியர்?
A. பெற்றோர், B. உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்,
C.சமூகம், D.ஆரம்ப பள்ளி ஆசிரியர்

64. ஒரு கற்றல் நிகழ்வில் பெறப்பட்ட அனுபவம், பிறிதொரு கற்றல் நிகழ்வுக்கு எடுத்துச் செல்லப்பட்டு தாக்கத்தை ஏற்படுத்துவது?
A. கற்றல் மாற்றம், B. புதிய கற்றல், C.தழுவிக் கற்றல், D. செய்து கற்றல்

65. தாழ்நிலைத் திறன்களில் தேர்ச்சி ஏற்படச் செய்து, அதற்கு அடுத்த உயர்நிலைக் கற்றலை அடைய முயற்சிப்பதே கற்றல் கற்பித்தலில் முறையானது என்ற கோட்பாட்டை கூறியவர் யார்?
A. புரூனர், B. இராபர்ட் காக்னே, C.வெஸ்லர், D. ஸ்கின்னர்

66. கானேயின் படிநிலைக் கற்றல் கோட்பாட்டின்படி கற்றல் வகைகள்----------
A. 6, B. 8, C. 10, D.14

67. கற்றனவற்றை மனதில் இருத்தி திரும்பவும் தேவைப்படும் போது அவற்றை வெளிப்படுத்தும் ஆற்றல்?
A.கற்கும் திறன், B.நினைவு, C.நுண்ணறிவு, D. புலனறிவு

68. பியாஜேயின் கற்றல் மேம்பாடு பற்றிய கோட்பாடு யாது?
A. வளரும் குழந்தையிடம் ஏற்படும் சமுதாயச் செல்வாக்கு பற்றியது,
B. சிந்தனை மேம்பாடு பற்றியது
C. தவறான செயல்களை திருத்துதல் பற்றியது
D. புலனியக்க நிலையிலுள்ள சிக்கல்களை பற்றியது

69. ஓர் ஆசிரியர் மாணவர்களை ஊக்குவிப்பதற்காக நட்சத்திரப் புள்ளிகளை வழங்கி, வார இறுதியில் அப்புள்ளிகளுக்கு ஏற்ப பரிசுகளை வழங்குகிறார். இச்செயல் எதைச் சார்ந்தது?
A. செயல்சார் ஆக்க நிலையுறுத்தல்.
B. தொன்மை ஆக்க நிலையுறுத்தல்
C. பழக்கப்படுத்துதல் D. பண்டூரா குறிப்பிடும் சமூகப் பயிற்சி

70. பியாஜேவின் கருத்துப்படி ஒருவர் தம் அனுபவங்களை நுணுகுமுன்னர் அவர்---
A. மனதளவில் சார்பு படுத்துகிறார்.
B. திட்டங்களை உருவாக்குகிறார்
C. பொருத்தமான பயிற்சி பெறுகிறார்.
D. தமது நுண்ணறிவால் மேலும் நுணுகுகிறார்.

71. 'ஜீன்' என்பதன் கீழ் நோக்கு அழுக்க வடிவங்கள் --------
A. பலதலைமுறைகளில் நிகழ்கின்றன
B. தூக்கலானவற்றால் அமுக்கப்படுகின்றன
C. அது அமைந்துள்ள குரோமசோமுடன் இணைகின்றன D. வடிவமில்லாதவை

72. உரத்த வெடிச்சத்தம் அச்சத்தை தோற்றுவிக்கிறது. இந்த எடுத்துக்காட்டில் உரத்த வெடிச்சத்தமானது------
A. துலங்கலாகும், B. நிலைமையாகும்,
C.தூண்டலாகும், D. புலனியக்கமாகும்.

73. சலிப்புத் தன்மை ஏற்படக் காரணம்?
A. ஆசிரியரது முதுமை, B. ஒரே மாதிரியான வேலை,
C. மரபுநிலை, D. குழந்தையின் முதிர்ச்சியின்மை

74. குழந்தைகளின் இயல்பான வினாக்களுக்கு ஆதாரமாக அமைவது?
A. கட்டூக்கம், B. பேரூக்கம், C. ஆராய்வூக்கம், D. திரட்டூக்கம்

75. குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கு சிறப்பான அடித்தளம் அமைப்பவை?
A. புலன்காட்சி அனுபவங்கள், B. புத்தகங்கள்,
C. அறிவுரைகள், D. பழக்கங்கள்

76. நண்பர்கள் நம்மைப் பாராட்டும் போது நம்முள் எழுவது?
A. சமூகக் காப்புணர்ச்சி, B. அறிவுசார் காப்புணர்ச்சி,
C. உடல்சார் காப்புணர்ச்சி, D. அழகுணர் காப்புணர்ச்சி

77. இயல்பூக்க கோட்பாட்டினை விளக்கியவர்?
A உண்ட்டு, B. பியாஜி, C. மக்டூகல், D. பாவ்லோ

78. ஒழுக்க வளர்ச்சியின் இறுதி நிலை-----
A. பட்டறிநிலை, B. குறிக்கோள் நிலை, C. சமூக நிலை, D . ஆதிக்கநிலை

79. மாணவர்கள் சதுரத்தின் பரப்பளவு -------- ன்பதை புரிந்து கொண்டுள்ளனரா என்று அறிய ----
1---- என்ற சூத்திரத்தை அறிந்திருந்ததால்,
2 -- -- ஆகியவை எதைக் குறிக்கிறது என்பதை அறிந்திருத்தல்
.3 அதை சூத்திரத்தில் பயன்படுத்தி மதிப்புகளை அறிந்திருத்தல்
4 --- யை மட்டும் அறிந்திருத்தல்
A. 1 மற்றும் 2, B. 2 மட்டும், C. 3 மட்டும், D. 1 மட்டும்

80. அன்பை வெளிப்படுத்துவதன் மூலம் -----
A. பாதுகாப்பு உணர்வினை ஏற்படுத்தலாம்
B. நம்முடையவர் என்ற நம்பிக்கை உணர்வை ஏற்படுத்தலாம்
C. ஆற்றலை வளர்த்து, ஒருங்கிணைந்த ஆளுமை வளர்ச்சி பெறலாம்
D. இவை அனைத்தும்லங்கலாகும்,

81.மாயத் தோற்றம், மாய ஒலி போன்ற மனப் பிரச்னைகள் தோன்றக் காரணம்?
A.அதிக கவலை, B. அதிக பொறாமை, C. அதிக அச்சம், D. மகழ்ச்சி.

82. எரிக்சனின் உளவியல் கோட்பாடு---
A. மனித மேம்பாட்டைப் பற்றிய நடத்தைக் கோட்பாடு
B. மேம்பாட்டின் ஒரு படிநிலை பற்றியது
C. முறைமைக் கோட்பாடு D. மனநோயை குணப்படுத்துவதில் பயன்படுவது

83. மன நலம் உடையவர்களிடம் காணப்படாத பண்பு எது?
A. தனக்கேற்ற லட்சியம், B.பொறுப்பேற்றல்,
C. ஒழுக்கம் இன்மை, D. தன்னாட்சி

84. ஆய்வில் 6 படிநிலைகளை கூறியவர்?
A. ஜான்டூயி, B. விரிசிந்தனை, C. தார்ன்டைக், D. வாட்சன்

85. பதினைந்தாவது வயதில் மூளையின் எடை : உடலின் எடை விகிதம்?
A. 1/8, B. 1/18, C. 1/30, D. 1/40

86. பிறக்கும் போது குழந்தையின் மூளையின் எடை ---- கிராம்?
A.200, B.300, C.350, D. 400

87. ஆக்கத் திறனில் 5 பண்புகளை விளக்கி யவர் யார்?
A. டாரான்ஸ், B. ஸ்பியர்மேன், C. கிரகாம்வாலஸ், D. டூயி

88. முறையாகப் பயன்படுத்தினால் தகவல் தொடர்பு ஊடகங்கள் -------
A. மன எழுச்சி வளர்ச்சிக்கு உதவும் B. கெடுக்க உதவும்
C. எதற்கும் பயன் இல்லை D. அறிவு குன்றும்

89. குமரப் பருவத்தில் தோன்றும் மன எழுச்சிகள்?
A . அன்பு, அச்சம், , கோபம், பதற்றம், அதிகரித்தும் குறைந்தும் மாறி மாறி வரும்
B . மகிழச்சி மன நிறை அதிகம்
C . கவலை, இறுக்கம் D. எந்த மாற்றமும் இல்லை

90. தேர்வுகளின் போது வளர்க்கப்பட வேண்டிய ஒழுக்கம்?
A . கல்வியில் லட்சியம், நேர்மை B . தர்மசிந்தனை,
C. வாய்மை .D குழந்தைகளுக்கான வீரங்கள்

### விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 61 -C | 62 - B | 63 - A | 64 - A | 65 - B | 66 - B |
| 67 - B | 68 - B | 69- A | 70 - A | 71 - B | 72 - C |
| 73 - B | 74 - C | 75 - A | 76 - A | 77 - C | 78 - B |
| 79 - A | 80 - D | 81 - A | 82 - B | 83 - C | 84 - A |
| 85 - C | 86 - C | 87 - A | 88 - A | 89 - A | 90 - A |

## தாள்–இரண்டு – தமிழ்

61. நேரு விரும்பிப் படித்த நூல்கள் எந்த மொழியில் இருந்தன?
A. இந்தி, B. ஆங்கிலம், C. தமிழ், D. ஜெர்மன்

62. நேரு தன் மகளுக்கு எழுதிய கடிதத்தில் எது பற்றி அதிகம் கூறுகிறார்?
A. உணவு, B. உடல் நலம், C. நூல்கள், D. வீடு

63. உலகின் மிகச் சிறந்த நாவல்களில் ஒன்று என்று நேரு குறிப்பிடுவது எதை?
A. வீடும் நாடும், B. போரும் அமைதியும்,
C. விடுதலை வேட்கை, D. நாட்டுப் பற்று

64. சாகுந்தலம் என்ற நாடகத்தின் ஆசிரியர் யார்?
A. பாரதியார், B.பாரதி தாசன், C.காளிதாசர், D. மில்டன்

65. வகுப்பறையில் கற்பதைவிட எது சிறந்தது என்கிறார் நேரு?
A. புத்தகம் படிப்பது, B. ஆசிரியரிடம் ஆலோசிப்பது,
C. வகுப்பறையில் நன்கு கவனிப்பது,
D. பெற்றோருடன் படிப்பது

66. இந்திராகாந்தி படித்த கல்லூரி எது?
A. விஸ்வபாரதி கல்லூரி, B.கேம்பிரிட்ஜ் கல்லூரி,
C. ஆகஸ்போட்டு கல்லூரி, D. விவேகானந்தா கல்லூரி

67. உலகம் என்ற பொருளில் வரும் தமிழ்ச் சொல் எது?
A. வையம், B. நாடு, C. மண், D. கொண்டல்

68. நேரு தனது மகளுக்கு எங்கிருந்து கடிதம் எழுதினார்?
A. திகார் சிறை, B. அல்மோரா சிறை,
C. பாளையங்கோட்டை சிறை, D. கல்கத்தா சிறை

69. 'கடம்' என்ற சொல்லின் பொருள் என்ன?
A. காடு, B. பானை, C. உடல், D. மரம்

70. பெரியார் தோற்றுவித்த இயக்கம் எது?
A. சன்மார்க்க சங்கம், B. சைவ மதச் சங்கம்,
C. பகுத்தறிவாளர் சங்கம், D. அரிமாசங்கம்

71. கேரளத்தில் நடந்த போராட்டத்தில் பெரியாருக்கு கிடைத்த சிறப்பு பட்டம் எது?
A. டாக்டர், B. முத்தமிழ் அறிஞர்,
C. வைக்கம் வீரர், D. விடுதலை வீரர்

72. ஈ.வெ.ரா.வுக்கு பெரியார் என்ற பட்டத்தை வழங்கியவர் யார்?
A. பாரதிதாசன், B.அண்ணா, C.நேரு, D.தாய்மார்

73. தேசியம் காத்த செம்மல் என்று யார் முத்துராமலிங்கத் தேவரை பாராட்டினார்?
A. பாரதி தாசன், B. திரு.வி.க, C. விவேகானந்தர், D. நேதாஜி

74. முத்துராமலிங்க தேவர் மறைந்த ஆண்டு எது?
A. 1970, B.1960, C.1963, D.1965

75. மத்திய அரசு முத்துராமலிங்க தேவருக்கு தபால் தலை வெளியிட்ட ஆண்டு?
A.1995, B.1998, C.1992, D.1990

76. மக்கள் கவிஞர் என்று யாரை அழைக்கிறோம்?
A. நாமக்கல் கவிஞர், B. பாபநாசம் சிவன்,
C. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், D. உடுமலை நாராயணகவி

77. பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் வாழ்ந்த காலம்?
A.1930–1959, B.1935–1960, C.1932–1970, D.1930–1980

78. தாராசுரம் எந்த ஆற்றின் கரையில் உள்ளது?
A. தென்பெண்ணை, B. பாலாறு, C. அரிசிலாறு, D. தாமிரவருணி

79. ஐராவதீஸ்வரர் கோயிலை கட்டிய மன்னன் பெயர் என்ன?
A. ராஜராஜசோழன், B. இரண்டாம் ராசராச சோழன்,
C. பராந்தக சோழன், D. கரிகால் சோழன்

80. கியூரி அம்மையார் எந்த நாட்டை சேர்ந்தவர்?
A. ஜப்பான், B. கனடா, C.ஐரோப்பா, D. போலந்து

81. கியூரி அம்மையார் தனது கணவருடன் சேர்ந்து முதலில் கண்டுபிடித்த பொருளின் பெயர் என்ன?
A. ரேடியம், B. பொலோனியம், C. யுரேனியம்,
D. ரேடியத்தின் அணுஎடை

82. கியூரியின் குடும்பம் மொத்தம் எத்தனை நோபல் பரிசு பெற்றது?
A. 10, B.6, C. 3, D. 5

83. துவ்வாமை என்ற சொல்லின் பொருள் என்ன?
A. வறுமை, B. செல்வம், C. எளிமை, D. பெருமை

84. எப்போது அறம் பெருகும்?
A. தருமம் செய்யும் போது, B. இன்சொல் பேசும்போது,
C. கடவுளை வணங்கும் போது, D. பிறருக்கு உதவும் போது

85. புலவரைப் பார்த்ததும் செல்வர்களுக்கு சில நேரங்களில் வரும் நோய் எது?
A. இதய நோய், B. காய்ச்சல், C. வயிற்று வலி, D. குமரகண்ட வலிப்பு

86. பதுமத்தான் யார்?
A. சிவன், B. விஷ்ணு, C. முருகன், D. பிரம்மன்

87. பகுத்தறிவு கவிராயர் என்று தமிழக மக்களால் அழைக்கப்படுபவர் யார்?
A. பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரம்,
B. உடுமலை நாராயணகவி,
C. திரிகூட ராசப்ப கவிராயர், D. ராமச்சந்திர கவிராயர்

88. 'கலைகளின் சரணாலயம்'– என்பது எது?
A. கபாலீஸ்வரர் கோயில், B. ஐராவதீஸ்வரர் கோயில்,
C.பிரகதீஸ்வரர் கோயில், D. ஏகாம்பரரேஸ்வரர் கோயில்

89. கடற்கரையில் உருவாகும் நகரங்கள் எப்பெயரால் அழைக்கப்பட்டன?
A. புறநகர், B. பட்டினம், C. குப்பம், D. பாக்கம்

90. விருது நகரில் முந்தைய பெயர் என்ன?
A. விருத்தாசலம், B. விருதுப்பட்டி,
C. விருதைப்பட்டினம், D. வியாபார நகரம்

### விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 61 -B | 62 - C | 63 - B | 64 - C | 65 - B | 66 - A |
| 67 - A | 68 - B | 69- C | 70 - C | 71 - C | 72 - D |
| 73 - B | 74 - C | 75 - A | 76 - C | 77 - A | 78 - C |
| 79 - B | 80 - D | 81 - B | 82 - C | 83 - A | 84 - B |
| 85 - D | 86 - D | 87 - B | 88 - B | 89 - B | 90 - B |

தொடரும் – 3